NOVEMBER/DECEMBER 2025

FLT30/CLT30 — தமிழ் - III

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

1. நீரின்றி அமையாதது எது?

2. பயில்தொறும் யாருடைய தொடர்பு வேண்டும்?

3. சிலப்பதிகாரத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?

4. ஆபுத்திரன் - பெயர்க்காரணம் தருக.



5. மந்தரையின் வேறுபெயர் என்ன?

6. நாமகள் என்பவள் யார்?

7. சீறா என்பதன் பொருள் என்ன?

8. பொய்த்தவ வேடம் பூண்டவன் யார்?

9. இரட்சண்ய யாத்திரிகம் எழுதியவர் யார்?

10. ஐஞ்சிறு காப்பியங்களில் இரண்டின் பெயரைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) வான் சிறப்பு வழி அறியலாகும் செய்திகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறுவது என்ன?

12. (அ) மணிமேகலை - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரன் வரலாற்றை விளக்கி எழுதுக.

13. (அ) ஏமாங்கத நாட்டின் செல்வச் சிறப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) நாமகள் இலம்பகம் கூறுவனவற்றை விளக்குக.

14. (அ) சிலுவைப்பாட்டில் இயேசுபிரான் நிலை எங்ஙனம் கூறப்படுகிறது?

(அல்லது)

(ஆ) நபிபெருமான் விடம் மீட்ட நிகழ்வை விளக்குக.

15. (அ) தன் விவரக் குறிப்பு ஒன்றினைத் தயார் செய்க.

(அல்லது)



(ஆ) கீழ்க்கணக்கு அக நூல்களைப் பற்றிச் சுருக்கி எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்க.

16. வாழ்க்கைத்துணை நலம் அதிகாரக் கருத்துக்களைத் தொகுக்க.

17. கோவலனின் சிறப்புகளை அடைக்கலக் காதை வழி விவரிக்க.

18. மந்தரை சூழ்ச்சிப் படலம் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

19. மெய்பொருள் நாயனாரின் பக்திச் சிறப்பைப் புலப்படுத்துக.

20. ஐம்பெருங்காப்பியங்கள் குறித்துக் கட்டுரை வரைக.
